بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 34

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

25 முஹர்ரம் 1438 ஹிஜ்ரி கமரி 27 இகா 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 27 அக்டோபர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே இருக்கின்றது. முதலில் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் எந்த அளவு அவன் கால அவகாசம் வழங்குகின்றான் என்றால் உலகின் பல பகுதிகளிலும் அவர்களது பெயர் பரவி விடுகின்றது. அவர்களது வாதத்தைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்கின்றனர். பிறகு வானத்தின் அடையாளங்கள், அறிவுப்பூர்வமான மற்றும் எழுத்துப்பூர்வமான சான்றுகள் ஆகியவற்றின் மூலம் இறைவன் மக்கள் மீது அத்தாட்சியை நிறைவடையச் செய்கின்றான்.**

**இறைவனது கட்டளையால் இறைவனது தூதர்கள் புகழ் பெறுகின்றனர். இறைவனின் மலக்குகள் பூமியில் இறங்குகின்றனர். நல்லியல்பு கொண்ட மக்களது உள்ளங்களில் எந்த வழிகளை நீங்கள் கடைபிடித்துள்ளீர்களோ அது சரியல்ல என்பதை இடுகின்றனர். அப்போது அந்த மக்கள் நேரான வழியைத் தேடுவதில் ஈடுபடுகின்றனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹூம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

***கேள்வி (7) :*** அழைப்பை எட்ட வைத்தல் என்பதன் கருத்து என்ன ?

***பதில் :*** அழைப்பை எட்ட வைப்பதற்கு இரண்டு விஷயங்கள் அவசியமான -தாகும். முதலாவதாக, எந்த நபர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளாரோ அவர் நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன் என்பதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும் அவர்களிடம் நீங்கள் இன்னின்ன கொள்கைகளில் தவறில் இருக்கின்றீர்கள் அல்லது இன்னின்ன செயலளவிலான நிலைமைகளில் நீங்கள் சோம்பேறிகளாக இருக்கின்றீர்கள் என்று கூறி அவர்களது தவறுகளை அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். இரண்டாவதாக, வானத்தின் அடையாளங்கள், அறிவுப்பூர்வமான மற்றும் எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் ஆகியவற்றின் மூலம் தான் உண்மையாளராக இருப்பதை நிரூபிக்க வேண்டும். அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே இருக்கின்றது. முதலில் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் எந்த அளவு அவன் கால அவகாசம் வழங்குகின்றான் என்றால் உலகின் பல பகுதிகளிலும் அவர்களது பெயர் பரவி விடுகின்றது. அவர்களது வாதத்தைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்கின்றனர். பிறகு வானத்தின் அடையாளங்கள், அறிவுப்பூர்வமான மற்றும் எழுத்துப்பூர்வமான சான்றுகள் ஆகியவற்றின் மூலம் மக்கள் மீது இறைவன் அத்தாட்சியை நிறைவடையச் செய்கின்றான். உலகில் வழக்கத்திற்கு மாற்றமாக ஒருவரை புகழ்பெற வைப்பதும் ஒளிமயமான அடையாளங்கள் மூலமாக அத்தாட்சியை நிறைவடையச் செய்வதும் இறைவனது பார்வையில் நடக்க முடியாத ஒன்றல்ல. எவ்வாறு ஒரு நொடியில் வானத்தில் ஓர் எல்லையிலிருந்து மின்னல் பிரகாசித்து அதன் மறு எல்லை வரை பரவி விடுகின்றதோ அவ்வாறே இறைவனின் கட்டளையினால் இறைவனின் தூதர்கள் புகழ் பெறுகின்றனர். மேலும், இறைவனின் மலக்குகள் பூமியில் இறங்குகின்றனர். மேலும், நல்லியல்பு கொண்ட மக்களது உள்ளங்களில் எந்த வழிகளை நீங்கள் கடைபிடித்துள்ளீர்களோ அது சரியல்ல என்பதை இடுகின்றனர். அப்போது அந்த மக்கள் நேரான வழியைத் தேடுவதில் ஈடுபடுகின்றனர். மறுபக்கம் இறைவன் எத்தகைய காரணிகளை உருவாக்கி விடுகின்றான் என்றால், அதன் மூலமாக அவன் புறமிருந்து வந்துள்ள காலத்தின் இமாமைப் பற்றிய செய்தி அந்த மக்களுக்கு எட்டி விடுகின்றது. குறிப்பாக இந்தக் காலம் அத்தகைய ஒரு காலமாக இருக்கின்றது. அதாவது, சில நாட்களுக்குள் ஒரு பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரன் கூட அவப்பெயருடன் முழு உலகிலும் பிரபல்யமாகி விடுகின்றான். அவ்வாறிருக்க எவர்களுடன் எல்லா நேரமும் இறைவன் இருக்கின்றானோ அத்தகைய இறைவனது அடியார்கள் இந்த உலகில் புகழைப் பெற முடியாதா ? அவர்கள் மறைவாகத்தான் இருப்பார்களா ? அவர்களை புகழ் பெற வைக்கின்ற ஆற்றல் இறைவனுக்கு இல்லையா ?☆ நான் பார்க்கின்றேன். இறைவனது அருள் எவ்வகையில் என்னுடன் இருக்கின்றது என்றால், எனது அத்தாட்சியை நிறைவடையச் செய்வதற்கும், தனது நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் இறைவன் எத்தகைய வழிவகைகளை நியமித்துள்ளான் என்றால் இதற்கு முன்னர் எந்த ஒரு நபிக்கும் அவை கிடைக்கவில்லை. எனது காலத்தில் பல்வேறு நாடுகளுக்கிடையிலுள்ள தொடர்புகள் இரயில் பயணம், தந்தி, தபாலிற்கான ஏற்பாடு, கடலிலும் தரையிலும் உள்ள பயணத்திற்கான ஏற்பாடுகள் ஆகியவை எந்த அளவு அதிகமாகி விட்டன என்றால் எல்லா நாடுகளும் ஒரு நாடைப் போன்று ஆகி விட்டன. இன்னும் சொல்வதென்றால், ஒரு நகரத்தைப் போன்று அவை ஆகி விட்டன. ஒரு நபர் சுற்றிப் பார்க்க விரும்பினால் சிறு காலக்கட்டத்தில் அவர் முழு உலகையும் சுற்றி வர முடியும். இதை தவிர நூல்களை எழுதுவது எந்த அளவு எளிதாகி விட்டது என்றால், எத்தகைய அச்சகக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றால் நூறு வருடங்களில் கூட எழுதி முடிக்க முடியாத பல பக்கங்களைக் கொண்ட ஒரு நூலின் சில தொகுதிகளின் பல இலட்சக்கணக்கான பிரதிகளை ஒன்றிரண்டு வருடங்களில் நம்மால் எழுத முடியும். நாடு முழுவதும் அதை வெளியிட முடியும். எல்லா வகையிலும் தப்லீக் செய்வதற்கு எந்த அளவு எளிதான நிலை உருவாகி இருக்கின்றது என்றால் நமது நாட்டில் இன்றிலிருந்து நூறு வருடங்களுக்கு முன்னர் அவற்றின் பெயரும் அடையாளமும் கூட இருக்கவில்லை. இன்றிலிருந்து ஐம்பது வருடங்களுக்கு முன்னுள்ள காலக்கட்டத்தின் மீது பார்வையைச் செலுத்தினால் பெரும்பாலான மக்கள் படிக்காதவர்களாகவும் அறிவீனர்களாகவும் இருந்தது நிரூபணமாகும். ஆனால், இப்போது அதிகமாக கிராமப் புறங்களில் கூட கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டிருப்பதன் காரணமாக எந்த அளவு அறிவின் ஆற்றல் மக்களுக்கு கிடைத்திருக்கின்றது என்றால் அவர்கள் மார்க்க நூல்களை மிக எளிதாக புரிந்து கொள்கின்றனர். என் தரப்பிலிருந்து இந்த

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளத்தை எடுத்துரைத்தவாறு ஒரு சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். தமக்காக விரும்புகின்றவற்றை தமது சகோதருக்காக அல்லது பிறருக்காக விரும்புவரே உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். இது எப்படிப்பட்ட வழிகாட்டும் விதிமுறை என்றால் அது குடும்பம் முதல் உலகளாவிய தொடர்புகள் வரை எல்லா மட்டத்திலும் அன்பு, நேசம் மற்றும் சமாதானத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்தித் தருகின்றது. சண்டைகளை ஒழிக்கின்றது. உள்ளங்களில் மென்மையை உருவாக்குகின்றது. ஒருவர் மற்றவருடைய உரிமைகளை வழங்குவதன் பக்கம் கவனமூட்டுகின்றது.

நான் பல சந்தர்ப்பங்களில் அந்நியர்களின் முன்னிலையில் இந்த விஷயத்தை எடுத்துரைக்கும் போது அவர்கள் பெரும் தாக்கத்திற்குள்ளாகின்றனர். ஆனால், நல்ல விஷயங்களை எடுத்துரைத்து மக்களை தாக்கத்திற்குள்ளாக்குவது மட்டும் நமது நோக்கமன்று. மாறாக, நமது செயல்களால் இஸ்லாமிய கட்டளைகளின் அழகை நிரூபித்துக் காட்டுவது நமது நோக்கமாகும். நீங்கள் கூறும் விஷயங்கள் நல்ல விஷயங்கள்தான். ஆனால், உங்களில் எத்தனை நபர்கள் அதன்படி செயல்படுகின்றீர்கள் என்று நம்மிடம் அந்நியர்கள் கேள்வி கேட்கலாம். சந்தர்ப்பம் வரும்போது சுயநலத்தை வெளிப்படுத்தாதவர் எத்தனை பேர் உங்களில் உள்ளனர்? என்றும் கேட்கலாம். விஷயத்தைக் கூறுபவர் அவ்விஷயத்தின்படி தானும் செயல்படும்போதுதான் விஷயத்தின் சிறப்பு வெளிப்படும்.

நாம் நமது உரிமைகளைப் பெறுவதற்கு எவ்வாறு நிம்மதியிழந்து விடுகிறோமோ அதேபோன்ற பிறரின் உரிமைகளை நிறைவேற்றுவதற்காகவும் அதே அளவுகோலை நிலைநாட்ட வேண்டும். நம்மிடம் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டால், நாம் மன்னிக்கப்பட வேண்டும். எந்த தண்டனையும் தரப்படக் கூடாது என்று நமக்காக நாம் விரும்புகிறோம். அவ்வாறிருக்கும் போது வேறு ஒருவர் தவறு செய்து அதனால் நாம் பாதிப்பிற்குள்ளாகி இருந்தாலும் கூட அந்த நபர் பெரிய குற்றவாளி இல்லையென்றால், மீண்டும் மீண்டும் அவர் குற்றம் புரியவில்லை என்றால் அவருக்காகவும் நாம் மன்னிப்பையே விரும்ப வேண்டும். ஆயினும் ஒருவரின் தவறால் ஜமாஅத் அல்லது சமுதாயத்தின் நலன் பாதிக்கின்றது என்றால் அது தனி நபர் தவறாக இருக்காது. அந்தக் குற்றம் சமுதாயக் குற்றமாக ஆகி விடும். பின்னர் அதுபோன்ற மக்கள் தொடர்பானவற்றை ஜமாஅத் அமைப்பு தீர்மானிக்கும். தனிநபர் அல்ல.

**கோபத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் வைப்பது, பொறுமையைக் கடைபிடிப்பது, வீணான விஷயங்களைப் பேசுவதிலிருந்தும் விலகியிருப்பது ஆகியவை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள போதனைகள்**

அல்லாஹ் நம்மிடம் கோபத்தை அடக்கிய பிறகு மன்னிக்கும்படி கூறியுள்ளான். அது எவ்வித ஞானமுமின்றி கூறப்பட்ட விஷயமல்ல. மன்னித்துக் கொண்டே செல்லுங்கள் என்றும் அவன் கூறவில்லை. மாறாக மன்னித்தல் மற்றும் தண்டனை வழங்குதல் ஆகியவற்றிலுள்ள நுட்பமான ஞானங்களை நமக்கு எடுத்துக் கூறி தீர்ப்பளிக்குமாறு அல்லாஹ் கூறுகின்றான். மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படும் என்றால் மன்னிப்பதே சிறந்தது. தண்டிப்பது சீர்திருத்தம் செய்ய அவசியம் என்றால், ஞானத்துடன் செயல்படுவதன் எதிர்பார்ப்பு தண்டனை வழங்குவதில்தான் உள்ளது என்றால் அதன் பிறகு சந்தேகமின்றி சம்பந்தப்பட்ட துறை வரை அதனை கொண்டு செல்லலாம்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அநீதியிலிருந்து குற்றம் புரிந்தவர்களை அன்னார் மன்னித்தது தொடர்பான ஈடிணையற்ற சம்பவங்களை ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **23 செப்டம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **23 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ۔ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளத்தை எடுத்துரைத்தவாறு ஒரு சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். தமக்காக விரும்புகின்றவற்றை தமது சகோதருக்காக அல்லது பிறருக்காக விரும்புவரே உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். (சுனன் இப்னு மாஜா கிதாபுஸ் ஸுஹது பாபுல் வரஹ் வ தக்வா ஹதீஸ் 4217 பக்கம் 2) இது எப்படிப்பட்ட வழிகாட்டும் விதிமுறை என்றால் அது குடும்பம் முதல் உலகளாவிய தொடர்புகள் வரை எல்லா மட்டத்திலும் அன்பு, நேசம் மற்றும் சமாதானத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்தித் தருகின்றது. சண்டைகளை ஒழிக்கின்றது. உள்ளங்களில் மென்மையை உருவாக்குகின்றது. ஒருவர் மற்றவருடைய உரிமைகளை வழங்குவதன் பக்கம் கவனமூட்டுகின்றது. நான் பல சந்தர்ப்பங்களில் அந்நியர்களின் முன்னிலையில் இந்த விஷயத்தை எடுத்துரைக்கும்போது அவர்கள் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். ஆனால், நல்ல விஷயங்களை எடுத்துரைத்து மக்களை தாக்கத்திற்குள்ளாக்குவது மட்டும் நமது நோக்கமன்று. மாறாக, நமது செயல்களால் இஸ்லாமிய கட்டளைகளின் அழகை நிரூபித்துக் காட்டுவது நமது நோக்கமாகும்.

நீங்கள் கூறும் விஷயங்கள் நல்ல விஷயங்கள்தான். ஆனால், உங்களில் எத்தனை நபர்கள் அதன்படி செயல்படுகின்றீர்கள் என்று நம்மிடம் அந்நியர்கள் கேள்வி கேட்கலாம். சந்தர்ப்பம் வரும்போது சுயநலத்தை வெளிப்படுத்தாதவர் எத்தனை பேர் உங்களில் உள்ளனர்? என்றும் கேட்கலாம். விஷயத்தைக் கூறுபவர் அவ்விஷயத்தின்படி தானும் செயல்படும்போதுதான் விஷயத்தின் சிறப்பு வெளிப்படும். நமது சொல்லும் செயலும் ஒன்றுபோல் இருக்கும்போதுதான் நமது சிறப்புத்தன்மை மக்களுக்கு தெரிய வரும். மக்கள் பேச்சைக் கேட்பதோடு நின்று விடுவதில்லை. மாறாக, நம்மை பார்க்கவும் செய்கின்றார்கள். நான் ஜெர்மனி சுற்றுப் பயணத்தின் கடைசி ஜுமுஆவில் கூறியிருந்தேன். ஜெர்மனியில் ஒரு பள்ளிவாயில் திறப்பு விழா சந்தர்ப்பத்தின்போது அந்தப் பகுதியின் மாவட்ட கமிஷனர் கூறினார். நீங்கள் பெண்களுடன் கை குலுக்குவதை தவிர்த்து அவர்களை அவமரியாதை செய்கின்றீர்கள் என்று நம் மீது ஆட்சேபனை செய்தார். அதற்கு விளக்கமான, திருப்திகரமான பதிலை நான் வழங்கினேன். எனது அந்த பதில் தொடர்பாக தனது கருத்தைக் கூறியவாறு ஒரு நபர் கூறினார். ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உள்ளது என்பது உண்மைதான். அவரது மார்க்கம் அல்லது மரபு அவருக்கு என்ன கூறியுள்ளதோ அதற்கேற்ப நாட்டிற்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவரை அதன்படி செயல்படுவது அவரது உரிமையாகும் என உங்கள் கலீஃபா கூறியுள்ளார்கள். ஆனால், அஹ்மதி இளைஞர்கள் இதன்படி செயல்படுகின்றார்களா? இல்லையா? அல்லது அஹ்மதிய்யத்தின் பெரும்பான்மை அதன்படி செயல்படுகின்றதா? இல்லையா? என நாங்கள் பார்ப்போம். அப்போதுதான் இதன் உண்மை நிலவரம் தெரிய வரும் என்று அவர் கூறினார்.

எனவே, நாம் மார்க்கத்தின் பெயரால் ஒரு கட்டளையைப் பற்றி அல்லது மார்க்கம் போதிக்கும் உயரிய நல்லொழுக்கங்களைப் பற்றி எடுத்துரைக்கும்போது இவர்களின் செயல் எவ்வாறு உள்ளது? என்று அந்நியர்கள் நம்மைப் பார்க்கின்றனர். உங்களது நல்லொழுக்கங்கள் உயரியதாக இருந்து, ஒருவர் மற்றவர் மீது வைத்துள்ள உணர்வுகள் மற்றும் எண்ணங்கள் உயரியதாக இருக்கும் போதும்தான் நீங்கள் உண்மையான நம்பிக்கையாளரா? இல்லையா? என்பது தெரிய வரும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய அந்த அளவுகோலை எவராலும் மறுக்க முடியாது. அந்த அளவுகோல் என்னவென்றால், நீங்கள் உங்களுக்காக விரும்புவதை உங்களது சகோதரர்களுக்காகவும் விரும்புங்கள். உங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கு மட்டும் நீதி, நீதி என துடிப்பவர்களாக இருந்து பிறரின் உரிமைகளைக் கொடுக்கும் இடத்தில் எதிர்மறையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துதல் கூடாது. எனவே, நாம் நமது உரிமைகளைப் பெறுவதற்கு எவ்வாறு நிம்மதியிழந்து விடுகிறோமோ அதேபோன்று பிறரின் உரிமைகளை நிறைவேற்றுவதற்காகவும் அதே அளவுகோலை நிலைநாட்ட வேண்டும். நம்மிடம் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டால், நாம் மன்னிக்கப்பட வேண்டும். எந்த

தண்டனையும் தரப்படக் கூடாது என்று நமக்காக நாம் விரும்புகிறோம். அவ்வாறிருக்கும்போது வேறு ஒருவர் தவறு செய்து அதனால் நாம் பாதிப்பிற்குள்ளாகி இருந்தாலும் கூட அந்த நபர் பெரிய குற்றவாளி இல்லையென்றால், மீண்டும் மீண்டும் அவர் குற்றம் புரியவில்லை என்றால் அவருக்காகவும் நாம் மன்னிப்பையே விரும்ப வேண்டும். ஆயினும், ஒருவரின் தவறால் ஜமாஅத் அல்லது சமுதாயத்தின் நலன் பாதிக்கின்றது என்றால் அது தனி நபர் தவறாக இருக்காது. அந்தக் குற்றம் சமுதாயக் குற்றமாக ஆகி விடும். பின்னர் அதுபோன்ற மக்கள் தொடர்பானவற்றை ஜமாஅத் அமைப்பு தீர்மானிக்கும். தனிநபர் அல்ல. எவ்வாறிருப்பினும், சமூகத்தின் அன்றாட வாழ்வில் நாம் எங்கு நமக்குரிய உரிமைகளைப் பெற விரும்புகின்றோமோ அங்கு பிறருக்குரிய உரிமைகளைக் கொடுப்பதற்கு நமக்கு எண்ணம் உள்ளதா? இல்லையா? என்று ஆய்வு செய்ய வேண்டும்.

இதன் அடித்தளம் குடும்பம், நண்பர்கள் ஆவர். சகோதர சகோதரிகள் மற்றும் ஏனைய உறவினர்களும் இதில் அடங்குவர். சிறிய அளவில் இந்த சிறிய மட்டத்தில் அதற்குரிய எண்ணம் பரவும். சுயநலம் முடிவுக்கு வரும். பிறரது உரிமைகளைக் கொடுப்பது பற்றி அதிகம் பேசப்படும். மன்னித்தலின் பக்கம் கவனம் அதிகரிக்கும். தண்டிப்பதன் பக்கமும் அல்லது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதன் பக்கமும் கவனம் குறைந்து விடும். அல்லாஹ் திருக்குர்ஆனில் வெளிப்படையான உரிமைகளை மற்றும் தேவைகளை கவனத்தில் கொள்வதன் பக்கம் கவனமூட்டியதுடன் மன்னித்தலின் பக்கமும் கவனமூட்டியுள்ளான்.

الَّذِينَ يُنْفِقُونَ فِي السَّرَّاءِ وَالضَّرَّاءِ وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ

அதாவது, அவர்கள் செல்வச் செழிப்பிலும் வறுமையிலும் செலவு செய்கின்றனர். மேலும், அவர்கள் கோபத்தை அடக்குபவர்கள். மக்களை மன்னிப்பவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர். அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். **(3:135)**

இந்த வசனத்தில் முதலில் அல்லாஹ்வின் ஏழை அடியார்களின் உரிமைகளை வழங்குவதற்காக செலவிடுவது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான். பிறருக்கு உதவி செய்யக் கூடியவர் கண்டிப்பாக முஹ்ஸின் (நன்மை செய்பவர்) ஆவார். அவர் பிறருக்கு பயனளிக்கக் கூடியவராகவும், நன்மையில் நிலை நிற்பவராகவும், இறையச்சத்தின் வழி நடப்பவராகவும் இருக்க வேண்டும். எனவே, நன்மையில் நிற்கக்கூடிய அல்லாஹ்வுக்காக இறையச்சத்தின் வழியில் பிறருக்கு நன்மை செய்யக்கூடிய நபர் நிச்சயமாக முஹ்ஸின் (நன்மை செய்பவர்) ஆவார். அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் தன்னலமற்றவராகவே இருப்பார். அவர் மறைவாகவும், வெளிப்படையாகவும் அல்லாஹ்வின் திருப்திக்காக செலவிடுபவராக இருப்பார். இந்த நிலை மனிதனிடம் உருவாகி விட்டால் பின்னர் அவன் சுயநலத்துடன் செயல்படமாட்டான். தனது சகோதரனுக்கு தீமையை விரும்பமாட்டான். அதுபோன்ற மக்கள் ஆன்மீக நிலையிலும் முன்னேறுபவர்களாக இருப்பர். அத்தகைய நபர்கள் அல்லாஹ் நேசிக்கின்ற மக்களில் இணைந்து விடுவர்.

அடுத்து முஹ்ஸினீனின் (நன்மை செய்பவர்களின்) அடையாளமாக அவர்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பர் என அல்லாஹ் கூறுகின்றான். கோபம் வருவது இயற்கையானதாக இருக்கும் இடங்களிலும் கூட அவர்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவர்; கோபத்தை அடக்கி விடுவர். கோபத்தை அடக்கிய பிறகு மக்களை மன்னிக்கும் பழக்கமும் ஏற்பட வேண்டும். அந்நிலையிலேயே உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டில் வைப்பதில் அவரது தரம் பரிசோதிக்கப்படுகின்றது. இது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. கோபத்தை அடக்கி பழிவாங்கும் உணர்ச்சியை உள்ளத்திலிருந்து அகற்றி விடுவது என்பது மாபெரும் விஷயமாகும். அதாவது கோபப்படவும் கூடாது. பழிவாங்கும் எண்ணமும் உள்ளத்திலிருந்து அகன்று விட வேண்டும். கோபத்தின் உணர்வுகளை வெளியேற்றி விடுவது மட்டும் போதுமானதல்ல. மாறாக, தவறிழைத்தவர் மீது சில நன்மைகளும் செய்யப்பட வேண்டும். இது மிகப்பெரிய விஷயமாகும். ஆனால், நம்பிக்கையாளர்–களிடம் இவ்விஷயங்கள் இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறான்.

அறிவிப்புகளில் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களைப் பற்றிய ஒரு சம்பவம் வருகின்றது. அன்னாரது அடிமை ஒருவர் ஒரு தவறிழைத்தபோது அன்னாருக்கு மிகவும் கோபம் வந்தது. அந்த அடிமைக்கு தண்டனை கொடுக்க அவர்கள் விரும்பினார்கள். அப்போது அந்த அடிமை ‘وَالْكَاظِمِينَ الْغَيْظَ அவர்கள் கோபத்தை அடக்கி விடுவர்’ என்ற வசனத்தின் ஒரு பகுதியை ஓதினார். அந்த நேரத்தில் தண்டனை கொடுப்பதற்கு கையை ஓங்கியிருந்த ஹஸ்ரத் ஹஸன் அவர்கள் கையை கீழே போட்டு விட்டார்கள். அடிமையை தண்டிக்கவில்லை. அதனால் அந்த அடிமைக்கும் இன்னும் தைரியம் ஏற்பட்டது. அவன் وَالْعَافِينَ எனக் கூறினான். அதாவது அவர்கள் மக்களை மன்னிப்பவர்கள் ஆவர். அப்போது ஹஸ்ரத் ஹஸன் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க செல்! நான் உங்களை மன்னித்து விட்டேன் என்று கூறினார்கள். அப்போது அந்த அடிமைக்கும் இன்னும் தைரியம் ஏற்பட்டது. وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ என அவர் ஓதினார். அதாவது, அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். அப்போது அன்னார் அந்த அடிமையிடம் இன்று நான் உங்களை விடுதலை செய்து விட்டேன். நீங்கள் எங்கு செல்ல விரும்புகின்றீர்களோ அங்கு சென்று விடலாம் என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 179-180; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ்வின் நேசத்திற்கு ஆசைப்படுபவர்கள் மற்றும் அல்லாஹ்வுக்கு அஞ்சக் கூடியவர்களின் நடைமுறை இப்படித்தான் இருக்கும். அவர்கள் தவறிழைத்தவரின் தவறை மட்டும் மன்னிப்பதில்லை. மாறாக, அவர்களுக்கு நன்மையும் செய்வர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்தின் அடிப்படையில் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். எந்த நபர் கடினம் காட்டுகின்றாரோ மேலும் கோபம் கொள்கின்றாரோ அவரின் நாவிலிருந்து இறை ஞானம் மற்றும் நுட்பமான ஞானங்களிலுள்ள கூற்றுகள் ஒருபோதும் வெளிவர முடியாது. எவர் தனக்கு முன்னால் இருப்பவர்களிடம் மிக விரைவாக கோபமடைந்து கட்டுப்பாட்டை இழந்து விடுகிறாரோ அவரது உள்ளம் நுட்பமான ஞானங்களிலிருந்து விலக்கப்படுகின்றது. அசுத்தமான எண்ணம் கொண்டவர், கட்டுப்பாடற்ற நாவு படைத்தவர் இன்பமயமான நீரூற்றிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்கப்படுகின்றார். அதாவது, எவர் ஏசிப் பேசுவாரோ கட்டுப்பாடின்றி பேசக் கூடியவரோ அவர் ஆழமான நுட்பமான மற்றும் அல்லாஹ்வின் விருப்பத்திற்குரிய விஷயங்களிலிருந்து இழப்பிற்குரியவராகி விடுகின்றார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: கோபமும், நுட்பமான ஞானமும் ஒன்று சேர முடியாது. எவர் கடும் சினம் கொள்பவராக இருப்பாரோ அவர் குறைமதி கொண்டவராகவும் புரியும் திறன் மழுங்கியவராகவும் இருப்பார். அவருக்கு ஒருபோதும் எந்த மைதானத்திலும் வெற்றியும், உதவியும் வழங்கப்படுவதில்லை. கோபம் பாதி பைத்தியமாகும். அது அதிகமாகப் பொங்கி எழும்போது அந்த நபர் முழுமையான பைத்தியக்காரராகக் கூட ஆகி விடலாம். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 126-127; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். அறிவுக்கும் ஆவேசத்திற்கும் இடையில் மிக அபாயகரமான பகைமை உள்ளது. அறிவுடையவரிடம் பொருத்தமற்ற ஆவேசம் உருவாகுவதில்லை. ஆவேசமும், கோபமும் வந்து விடும்போது அறிவு நிலைநிற்க முடியாது. ஆனால், எவர் பொறுமை செய்து வீரத்தின் முன்மாதிரியை வெளிப்படுத்துவாரோ அவருக்கு ஓர் ஒளி வழங்கப்படுகின்றது. அதன் மூலம் அவரது அறிவு மற்றும் சிந்திக்கும் திறனில் ஒரு புதிய பொலிவு ஏற்பட்டு விடுகின்றது. அடுத்து அந்த ஒளியிலிருந்து ஒளியே பிறந்து கொண்டே செல்லும். கோபம் மற்றும் ஆவேசத்தின் நிலையில் உள்ளம் மற்றும் மூளை எல்லாம் இருளிலேயே கிடக்கும். எனவே, இருளிலிருந்து இருளே பிறக்கும். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 180; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இஸ்லாத்தின் போதனை மிகவும் நுட்பமான ஞானத்தைக் கொண்டதாகும். அதாவது, தீர்ப்பளிக்கும்போது ஒருவருக்கு எதிராக மனிதன் இருக்கும்போது குறிப்பாக சிந்தித்து புரிந்து தீர்ப்பளிக்க வேண்டுமே தவிர கோபத்தின் நிலையில் தீர்ப்பளிக்கக் கூடாது. சில இடங்களில் கடினம் நேரிடுகின்றது. ஆனால், கோபத்திற்குள்ளாகி சினம் கொண்டு கடினம் காட்டுவது ஆகுமானதல்ல. இஸ்லாத்தில் தண்டனை கொடுப்பதற்கு சில சிந்தனை உள்ளது. ஆனாலும் அதற்கென்று சில சட்டதிட்டங்கள் உள்ளன. கோபத்திற்குள்ளாகி தண்டனை வழங்கும்போது அது மனிதனை நுட்பமான ஞானத்திலிருந்து தூர விலக்குகின்றது; நீதியிலிருந்து தூர விலக்குகின்றது.

எனவேதான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: கோபத்திற்குள்ளாகி தண்டனை வழங்கினால் அது உள்ளத்தின் கடினமாக மாறி விடும். எப்போது உள்ளம் கடினமாகி விடுமோ அப்போது இறை ஞானம், நுட்பமான அறிவு போன்ற விஷயங்கள் அத்தகையவரின் நாவிலிருந்து வெளிப்படாது. அவரது அறிவு மழுங்கி விடும். எனவேதான், அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். முதலில் கோபத்தை தணியுங்கள். பின்னர் தண்டனை கொடுக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை தீர்மானிக்க வேண்டும். தண்டனை வழங்குவதற்கு அதிகாரமும் இருக்க வேண்டும். சுயமாக தண்டனை கொடுக்க எனக்கு அதிகாரம் உள்ளது என்று கூறி தனது கைகளாலேயே தண்டிக்க முற்படக் கூடாது. கோபத்தை தணிப்பதற்கு பொறுமையின் சில அம்சங்களை மேற்கொள்வது அவசியமாகும். எனவே பொறுமையின் தரத்தை அதிகரிப்பதற்கு அவசியம் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: பொறுமை செய்யக் கூடியவர்களின் அறிவு மற்றும் சிந்தனை ஆற்றல்களுக்கு ஓர் ஒளி கிடைக்கின்றது. அவர்களின் சிந்தனைகள் பக்குவப்பட்டதாக இருக்கும். அவர்களுக்கு ஒளி கிடைக்கின்றது. ஒரு நம்பிக்கையாளர் அறிவுடன் முடிவெடுப்பவராக இருந்தால் அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து வழிகாட்டுதல் கிடைக்கின்றது. அது அவர் விரும்பாத விஷயங்களாக இருந்தாலும் சரியே! அவர்களது முடிவெடுத்தலில் அவசரத்தன்மை காணப்படுவதில்லை. மாறாக, பொறுமையுடன் சிந்தித்து முடிவெடுக்கின்றனர். மேலும், நேர்மறை மற்றும் எதிர்மறை விஷயங்களை ஆராய்ந்து ஆழம் வரை சென்று ஆய்வு செய்த பிறகே பொறுமையுடன் நம்பிக்கையாளர் முடிவெடுப்பார்.

இதையும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். நான் முன்னரே கூறியது போன்று தண்டனை அளிப்பதற்கு எல்லாருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. எனது அறிவு தண்டனை கொடுக்கும்படி கூறுகிறது. எனவே நான் தண்டனை கொடுக்கின்றேன் என எவரும் கூற முடியாது. தண்டனை வழங்குகின்ற பணி

சம்பந்தப்பட்ட துறையின் பணியாகும். தவறிழைத்தவரை மனிதன் தானே மன்னித்து விட முடியும். ஆனால், தண்டனை கொடுப்பதற்கு எல்லா நிலையிலும் சட்டத்தின் உதவி பெறப்பட வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட துறையின் உதவி தேவையாகும். இவ்விஷயத்தை எப்போதும் மனிதன் கருத்தில் கொண்டால் பின்னர் சின்னச்சின்ன விஷயங்களுக்காக நடைபெறும் சண்டைகள் நடக்காது. மேலும், ஒருவர் மற்றவர் மீது வழக்கு தொடுத்து அதனால் ஏற்படும் நேரம் மற்றும் செல்வத்தில் விரயம் ஏற்படாது. ஒரு நீதிமன்றம் தவறிழைத்த ஒருவரை மன்னித்து விட்டால் கூட இரண்டாவது நபரின் கோபம் இன்னும் அதிகரிக்கின்றது. அவருக்கு ஏன் தண்டனை அளிக்கப்படவில்லை? அல்லது இவருக்கு குறைவான தண்டனை ஏன் கொடுக்கப்பட்டுள்ளது? என்று கூறியவாறு வழக்கை அடுத்த நீதிமன்றத்திற்கு கொண்டு செல்கின்றனர். அந்த சண்டைகளுக்கு காரணமான விஷயங்கள் கூட மிகவும் அபாயகரமானதாகக் கூட இருக்காது. மாறாக, மிகச் சிறிய விஷயமாகவே அது இருக்கும்.

கஸாவிலும் இதுபோன்ற விஷயங்கள் வருகின்றன. சில அஹ்மதிகள் இப்படியும் கூறுகின்றனர். நாங்கள் கஸாவிலிருந்து எங்கள் வழக்கை விடுவித்து விட்டு நீதிமன்றத்திற்கு செல்லவுள்ளோம் என்று கூறுகின்றனர். அந்த சண்டைகள் மிகவும் சிறிய விஷயமாகவே இருக்கும். இவ்வாறான நபர்கள் தங்களுக்கு தாங்களே நஷ்டமிழைத்துக் கொள்கின்றனர். அல்லாஹ் நம்மிடம் கோபத்தை அடக்கிய பிறகு மன்னிக்கும்படி கூறியுள்ளான். அது எவ்வித ஞானமுமின்றி கூறப்பட்ட விஷயமல்ல. மன்னித்துக் கொண்டே செல்லுங்கள் என்றும் அவன் கூறவில்லை. மாறாக, மன்னித்தல் மற்றும் தண்டனை வழங்குதல் ஆகியவற்றிலுள்ள நுட்பமான ஞானங்களை நமக்கு எடுத்துக் கூறி தீர்ப்பளிக்குமாறு அல்லாஹ் கூறுகின்றான்.

وَجَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا فَمَنْ عَفَا وَاَصْلَحَ فَاَجْرُهٗ عَلَى اللّٰهِ اِنَّهٗ لَا يُحِبُّ الظّٰلِمِيْنَ

ஒரு தீங்கிற்குரிய கூலி அதே அளவு தீங்கேயாகும். ஆனால், எவர் மன்னித்து சீர்திருத்துகிறாரோ அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடம் உள்ளது. **(42:41)**

எனவே, குற்றவாளிக்கு அவரது குற்றத்தை உணரச் செய்து சீர்படுத்துவதே அசல் விஷயமாகும். பழிவாங்குதல் கூடாது. வழக்குகளில் சிக்க வைக்கக் கூடாது. தனது செல்வத்தையும் நேரத்தையும் வீணடித்து பிறரின் செல்வத்தையும் நேரத்தையும் வீணடிக்கக் கூடாது. அதேபோன்று ஜமாஅத் அமைப்பிடம் விஷயம் இருந்தால் ஜமாஅத் அமைப்பு தொடர்பாக தவறான எண்ணம் கொள்வதும் கூடாது. மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படும் என்றால் மன்னிப்பதே சிறந்தது. தண்டிப்பது சீர்திருத்தம் செய்ய அவசியம் என்றால் ஞானத்துடன் செயல்படுவதன் எதிர்பார்ப்பு தண்டனை வழங்குவதில்தான் உள்ளது என்றால் அதன் பிறகு சந்தேகமின்றி சம்பந்தப்பட்ட துறை வரை அதனை கொண்டு செல்லலாம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த ஞானம் நிறைந்த போதனை தொடர்பாக தமது நூல்களில் பல இடங்களில் கூறியுள்ளார்கள். தர்யாகுல் குலூப் என்ற நூலில் ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒவ்வொரு தீமைக்குரிய தண்டனையும் அதே அளவிலான தீமை மட்டுமே ஆகும் என்பது நீதியின் சட்டமாகும். ஆனால், ஒருவர் தமக்கு துன்பமிழைத்தவரை மன்னித்து விட்டால் அது நன்மையாகும். ஆனால், துன்பமிழைத்தவரின் சீர்திருத்தத்தை நோக்கமாக கொண்டு மன்னித்தல் நிபந்தனையாகும். குற்றவாளி தனது குற்றத்தில் தைரியமிக்கவராக இருக்கக் கூடாது. அந்நிலையில் அவரை மன்னிப்பவர் தமது இறைவனிடம் அதிக நற்கூலியைப் பெறுவார். (திர்யாக்குல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 163)

அடுத்து பராஹீனே அஹ்மதிய்யாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தீமையின் பாதாளத்தில் நீதியின் சட்டம் என்னவென்றால் தீமை செய்த ஒருவர் அவர் செய்த தீமையின் அதே அளவிலேயே தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆனால், எவர் சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டு ஒருவரை மன்னித்து விடுகின்றாரோ அதுவும் அந்த மன்னித்தலுக்குப் பிறகு எந்த சீர்கேடும் ஏற்படவில்லை என்றால் அத்தகையவரின் நற்கூலி அவரின் இறைவனிடம் உள்ளது. அதாவது, சீர்திருத்தத்திற்காக மன்னித்தால் அதுபோன்ற மன்னித்தலினால் சீர்கேடு ஏற்படக் கூடாது. சீர்கேடு எதுவும் ஏற்படவில்லை என்றால் அல்லாஹ் கூறுகின்றான். அந்த மன்னித்தலுக்குரிய கூலி அல்லாஹ்விடம் உள்ளது. (பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 433-434 அடிக்குறிப்பிற்கு கீழுள்ள அடிக்குறிப்பு எண்.3) அவன் எவ்வளவு விரும்புவானோ அவ்வளவு கொடுப்பான்.

எனவே தவறிழைத்தவரிடம் அவர் மீண்டும் தவறிழைக்க மாட்டார் என்ற நிலை உருவாகும்போதுதான் மன்னித்தல் ஆகுமானதாகும். சில குற்றவாளிகள் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு முறையும் குற்றம் செய்து மன்னிப்புக் கேட்கின்றனர். அதுபோன்ற மக்களுக்கு தண்டனை அவசியமானதாகும். அந்த தண்டனையும் எப்படி இருக்க வேண்டும் என்றால் அதில் சீர்திருத்தத்தின் அம்சம் வெளிப்பட வேண்டும்.

அடுத்து ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: தீமைக்கான அளவு, செய்யப்பட்ட தீமையின் அளவிற்கு ஏற்பவே ஆகும். ஆனால், எவர் குற்றத்தை மன்னித்து விடுவாரோ அந்த மன்னித்தலின் மூலமாக சீர்கேடு எதுவும் ஏற்படாமல் சீர்திருத்தம் ஏற்பட்டால் அத்தகைய நபரிடம் இறைவன் திருப்தி கொள்கிறான். இறைவன் அவருக்குரிய நற்கூலியை வழங்குவான். எனவே, திருக்குர்ஆனை பொறுத்தவரை எல்லா இடங்களிலும் பழிவாங்குவது பாராட்டிற்குரியதல்ல. மாறாக, இடம், பொருள், ஏவலை அடையாளம் காண வேண்டும். சந்தர்ப்பம் எப்படிப்பட்டது? எதில் நன்மை உள்ளது? என்று பார்க்க வேண்டும். தண்டிப்பதில் பயனுள்ளதா? மன்னித்தல் சிறந்ததா? என்று பார்க்க வேண்டும். தண்டிப்பதும் மன்னிப்பதும் இடம், பொருள், ஏவலை அடையாளம் கண்டு காரண காரியத்துடன் செய்யப்படுதல் வேண்டும். கட்டுப்பாடற்ற நிலையில் அது ஆகுமானதல்ல. இதுவே திருக்குர்ஆனின் போதனையும் ஆகும். (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 30)

எந்த சட்டதிட்டமுமின்றி, எந்த விதிமுறையுமின்றி தண்டிப்பது ஆகுமானதல்ல. எந்த சட்டதிட்டமும் ஒழுங்குமுறைகளும் இன்றி காரணமில்லாமல் தண்டிப்பதும் அல்லது மன்னிப்பதும் சரியானதல்ல. அதற்கான சில எல்லைகள் உள்ளன. அதற்குள் நின்று செயல்பட வேண்டும். எதில் பயன் உள்ளது என பார்க்க வேண்டும். ஆக, இதுவே இஸ்லாமிய தண்டனை மற்றும் மன்னித்தலின் நுட்பம் ஆகும். சீர்திருத்தம் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

இன்றைய நாட்களில் உலக சட்டங்களில் பார்க்கின்றோம். ஒவ்வொரு குற்றத்திற்கும் தண்டனை அளிக்கப்படுகின்றது. பின்னர் சிறைச்சாலைகளில் சீர்த்திருத்தம் ஏற்படுவதற்காக குற்றவாளிகள் அடைக்கப்படுகின்றனர். ஆனால் முன்னேற்றம் அடைந்த நாடுகளைச் சார்ந்த இங்குள்ள பத்திரிகையாளர்களே எழுதுகின்றார்கள். குற்றவாளிகள் சிறைகளில் தண்டனை அனுபவித்து வெளியில் வரும்போது குற்றங்கள் செய்வதில் மேலும் தைரியம் படைத்தவர்களாக இருக்கின்றனர். ஏனென்றால், தண்டனை கொடுப்பவர்களும் குற்றவாளிகளும் வெறும் சட்டத்தை மட்டுமே பேணுகின்றனர். அல்லாஹ்வின் மீதான அச்சம் அவர்களிடம் இருப்பதில்லை. எவ்வாறிருப்பினும், நம்பிக்கையாளர்களுக்கான பொதுவான வழிகாட்டுதல் என்னவென்றால் அவர்களுக்கு தவறுகளை மன்னிப்பதற்கான பழக்கம் இருக்க வேண்டும்.

குற்றங்களின் தன்மை, குற்றவாளிகளின் நிலைமை மற்றும் முந்தைய நடைமுறைகளுக்கேற்ப முடிவு எடுக்கப்பட வேண்டும். கண்களை மூடிக்கொண்டு எல்லாரையும் மன்னித்து விட்டு செல்வதையும் அல்லாஹ் விரும்பவில்லை. அதேபோன்று ஆவேசமடைந்து எல்லாரையும் தண்டிப்பதையும் அல்லாஹ் விரும்பவில்லை. மன்னித்துக் கொண்டே செல்வதினாலும் சமூகத்தில் சீர்கேடு தோன்றும். தண்டனை கொடுத்துக் கொண்டே செல்வதனாலும் பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் அதிகரிக்கும். மேலும், அதன் மூலம் சமூகத்தில் வெறுப்பின் சுவர்கள் எழுப்பப்படும். மேலும், அமைதியின்மை பரவிக் கொண்டே செல்லும். நாம் நமது சுற்றுப்புறத்தை ஆய்வு செய்து பார்த்தால் எவர்கள் மீது குற்றமிழைக்கப்பட்டதோ அவர்கள் குற்றவாளிகளுக்கு எப்படியும் தண்டனை கொடுத்தே ஆக வேண்டும் என்று கூறுகின்றனர். அப்போதுதான் பிறருக்கு அந்த தண்டனையானது படிப்பினையாக இருக்கும். எவருக்கும் தவறு செய்வதற்கான எந்தத் துணிவும் வராது என்று கூறுகின்றனர். ஆனால், குற்றம் செய்த குற்றவாளியோ மன்னிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

இன்றைய நாட்களில் மனித உரிமை அமைப்புகளும் அதிகமாக தோன்றியுள்ளன. எங்கு அவர்கள் பல நல்ல பணிகளைச் செய்கின்றார்களோ அங்கு மன்னிப்பைப் பெற்றுத் தருவதிலும் மிக அதிகமாக வரம்புமீறி செயல்படுகின்றனர். எல்லா வகையான குற்றவாளிகளையும் விடுவிக்க செய்வதற்கு முயற்சி செய்கின்றனர். அதேபோன்று எவர்கள் மார்க்கம் மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளைப் புறக்கணிக்கின்றார்களோ அவர்களும் கூட மன்னியுங்கள் என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். எனவே, மன்னிக்க


## சுத்தமான தேன் கிடைக்கும்

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**
B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)
Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். **Ph : +91 98437 22215**

வேண்டும் என்று கூறுகின்றனர். ஏனென்றால் இறைவனே அடியார்களை மன்னிக்கின்றான். எனவே, நீங்களும் அடியார்களின் உரிமைகளை வழங்கியவாறு மன்னியுங்கள் என்று கூறுகின்றனர். தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் குற்றவாளிகள் அனைவரையும் மன்னித்து விட வேண்டும். ஜமாஅத்திற்கு அதனால் நன்மை ஏற்படுகிறதா? தீமை ஏற்படுகிறதா? என்பதையெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. அடியார்களின் உரிமை வழங்கப்பட வேண்டும். எனவே மன்னிக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு தேவைக்கு அதிகமாக பேசக்கூடியவர்கள் இரண்டு தரப்பிலும் உள்ளனர். ஒன்று அவர்கள் குற்றத்தை தொழிலாகக் கொண்டுள்ளனர் அல்லது நீதியிலிருந்து விலகி தமக்கு சாதகமாக தீர்ப்பைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். அவர்கள் குற்றமிழைப்பதோடு மட்டுமல்லாமல் அதிலிருந்து தப்பிப்பதற்கு தகாத வழிகளில் அல்லாஹ்வின் கட்டளைகளை நினைவு கூறுகின்றனர். இவ்வகையான மக்கள் சுயநலவாதிகளாக உள்ளனர். இதுபோன்ற மக்களுடன் உள்ள வியாபாரங்களில் எவராது ஒரு தவறு செய்து விட்டால் ஒருபோதும் தவறிழைப்பவர்களை மன்னிப்பது கிடையாது. மாறாக, குற்றவாளிகளை முண்டியடித்து தண்டனை பெற்றுக் கொடுக்கவே முயற்சி செய்கின்றனர். இவ்வாறு அவர்களின் அளவுகோல் அங்கு மாறி விடுகிறது. அப்போது அவர்கள் உங்களுக்காக நீங்கள் விரும்புகின்றவைகளை உங்கள் சகோதரருக்காகவும் விரும்புங்கள் என்ற கட்டளையை மறந்து விடுகின்றனர்.

அதேபோன்று எவர்கள் குற்றவாளிகளை மன்னிப்பதை விரும்புவதில்லையோ அவர்களுக்கு எப்படியும் தண்டனை கிடைக்க வேண்டும் என விரும்புகிறார்களோ அப்படிப்பட்டவர்கள் சுயமே அவர்களுடைய ஏதாவது விஷயம் வந்தால் மன்னித்து விட வேண்டும். மன்னிப்பதே சிறந்தது எனக் கூறுகின்றனர். இஸ்லாம் இதுபோன்ற சுயநலவாதிகளின் கூற்றுகளை ரத்து செய்கின்றது. மேலும், உயர் தரமான நீதியை அடிப்படையாகக் கொண்ட தீர்ப்பை வழங்குகின்றது. மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படும் என்றால் மன்னித்து விட வேண்டும். தண்டனையை தவிர வேறு வழியில்லை என்பது தெளிவாகத் தெரிந்தால் அந்நிலையில் தண்டனை அவசியமாகும்.

எவ்வாறிருப்பினும், இது இஸ்லாத்தின் ஓர் அடிப்படை விதிமுறையாகும். இப்போது நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு மன்னித்து வந்துள்ளார்கள் என்றும், மேலும் அன்னார் தனது தோழர்களுக்கு இது தொடர்பாக என்ன அறிவுரை வழங்கியுள்ளார்கள் என்றும் பார்ப்போம்.

ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களுடைய உதாரணத்தை நான் கூறியிருந்தேன். அன்னார் தனது வேலைக்காரனின் ஒரு தவறை மன்னித்து விட்டார்கள். ஆனால், அது ஒரு சிறிய தவறாக இருந்தது. மன்னித்தலின் உச்சகட்டம் நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் தென்படுகின்றது. எவர்களின் தண்டனையைப் பற்றி முடிவும் எடுக்கப்பட்டிருந்தோ அவர்களையும் கூட அன்னார் மன்னித்து விட்டார்கள். பிறருக்கு தொல்லை கொடுத்த குற்றவாளிகளை மன்னிக்கவில்லை. மாறாக, தமக்கு துன்பம் கொடுத்த மற்றும் தமது பிள்ளைகளைக் கொன்ற கொலையாளியைக் கூட மன்னித்து விட்டார்கள். ஏனென்றால் குற்றம் புரிந்தவரிடம் சீர்திருத்தம் ஏற்பட்டிருந்தது.

அறிவிப்புகளில் ஒரு சம்பவம் வருகிறது. ஹப்பார் பின் அஸ்வத் என்ற நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஸைனப் அவர்கள் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்யும்போது அன்னார் மீது அம்பினால் கொலை வெறித் தாக்குதல் நடத்தினார்கள். அப்போது அன்னார் கர்ப்பிணியாக இருந்தார்கள். அந்த தாக்குதலினால் அன்னாரின் கருவும் கலைந்தது. அன்னாரும் காயமுற்றார்கள். அந்தக் காயத்தின் காரணமாகவே அன்னாரின் மரணமும் நிகழ்ந்தது. இந்தக் குற்றத்தின் காரணமாக ஹப்பார் கொலை செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. மக்காக வெற்றியின்போது இந்த நபர் எங்கோ தப்பியோடி விட்டார். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்பி வந்தபோது ஹப்பார், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நின்றார். மேலும், கருணை காட்டுமாறு தான் யாசிப்பதாகக் கூறினார். முதலில் நான் உங்களுக்கு அஞ்சி ஓடி விட்டேன். ஆனால், உங்களின் மன்னிப்பும் கருணையும் என்னை திரும்ப அழைத்து வந்துள்ளது என்றும் கூறினார். இறைவனது நபியே! நாங்கள் அறிவீனர்களாகவும் இணை வைப்பவர்களாகவும் இருந்தோம். இறைவன் உங்கள் மூலமாக எங்களுக்கு நேர்வழி காட்டினான். அழிவிலிருந்து எங்களைப் பாதுகாத்தான். நான் எனது வரம்புமீறுதல்களை ஒப்புக் கொள்கிறேன். எனது அறிவீனத்தை புறந்தள்ளி விட்டு என்னை மன்னியுங்கள் என்று அவர் வேண்டினார்.

ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது மகளைக் கொன்ற அந்த கொலை குற்றவாளியை மன்னித்து விட்டார்கள். மேலும், ஹப்பாரே! செல்லும்; நான் உம்மை மன்னித்து விட்டேன். இறைவன் உமக்கு இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் பாக்கியத்தை வழங்கியிருப்பது அவன் உம்மீது செய்த கருணையாகும் என்று கூறினார்கள். எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சீர்திருத்தம் ஏற்பட்டதைக் கண்ட பிறகு அன்னார் தனது மகளைக் கொன்ற கொலையாளியைக் கூட மன்னித்து விட்டார்கள். (தாரீஹ் கமீஸ் தொகுதி 2 பாபு திக்ரிர் ரிஜாலுல் அஹத அஸரல்லதீன ம.்.ஸரூஹும் யவ்ம ்.பத்ஹே மக்கத்துன் பக்கம் 93 பைரூத்திலுள்ள மோசுஸா ஷாபான் அச்சகத்தில் வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்மீது செய்யப்பட்ட எந்தவொரு வரம்பு மீறலுக்கும் ஒருபோதும் யாரையும் பழிவாங்கியதில்லை. (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ்.பஸாயில் பாபு முபாஅததிஹி லில் அனாம் ஹதீஸ் எண்.5944) உணவில் விஷம் கலந்து விருந்தளித்த அந்த யூதப் பெண்மணியையும் கூட மன்னித்தார்கள். அந்த விஷத்தினால் சில சஹாபாக்களுக்கு கூட பாதிப்பு ஏற்பட்டிருந்தும் மன்னித்து விட்டார்கள். (ஸீரத் இப்னு ஹிஸாம் பாபு பகிய்யது அம்ரே கைபர் பக்கம் 627-628. பைரூத்திலுள்ள மக்தபத்துல் அஸரிய்யாவில் அச்சிட்டு வெளியிடப்பட்டது)

அடுத்து ஹிந்தா என்ற பெண்மணி உஹுத் போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைக் கொன்று அன்னாரின் சடலத்தை அவர் சிதைத்தார். உடல் உறுப்புகளை வெட்டினார். காது, மூக்கு போன்றவற்றை துண்டித்தார். ஈரலைக் கடித்து துப்பினார். மக்கா வெற்றியின்போது பெண்களுடன் சேர்ந்து வந்து அவர் பைஅத் செய்து விட்டார். அவரின் பல கேள்விகளிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். நீர் அபூஸுஃப்யானின் மனைவியாகிய ஹிந்தா தானே! என்று கேட்டார்கள். அதற்கு ஆம்! அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்று அவர் பதில் கூறினார். இப்போது நான் உள்ளத்தால் முஸ்லிமாகி விட்டேன் என்றார். இதற்கு முன்னர் நடந்தவற்றை மன்னித்து விடுங்கள் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த ஹிந்தாவையும் மன்னித்து விட்டார்கள். ஹிந்தாவின் மீது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மன்னிப்பின் தாக்கம் எந்த அளவுக்கு ஏற்பட்டதென்றால் அவரிடம் அதனால் தலைகீழ் மாற்றம் உருவானது. மிகவும் தூய்மையான பெண்மணியாக அவர் மாறினார். மாறாக, அதே நாள் மாலை அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு விருந்து அளித்தார். உண்பதற்கு இரண்டு ஆடுகளைப் பொறித்து சமைத்து அனுப்பி வைத்தார். மேலும் இன்றைய நாட்களில் ஆடுகள் குறைவாகவே உள்ளன. எனவே, மிகவும் எளிமையான அன்பளிப்பு செய்யப்படுகிறது என்று கூறினார். அப்போது அல்லாஹ்வே! ஹிந்தாவின் ஆட்டு மந்தையில் அதிக பரக்கத்துகளை ஏற்படுத்துவாயாக! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். அந்த துஆவின் விளைவால் எந்த அளவுக்கு பரக்கத் ஏற்பட்டது என்றால், ஹிந்தாவால் ஆட்டு மந்தையை சமாளிக்க முடியவில்லை என்று வரலாற்றில் வருகின்றது. (ஸீரத் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 137-139. பாபு ்.பத்ஹுல் மக்கத்தி ஷர்துஹல்லாஹுத்தஆலா பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அப்துல்லாஹ் பின் அபி பின் ஸூலூல் உடைய செயல்களை அனைவரும் அறிவர். அவன் நயவஞ்சகர்களின் தலைவனாக இருந்தான். அவனுடைய அனைத்து அவமரியாதையான காரியங்களுக்கு நடுவிலும் அவரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மன்னித்தார்கள். மேலும், அவரது ஜனாஸாவையும் தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரது ஜனாஸாவை தொழ வைக்கக் கூடாது என்று பலமுறை கூறிய பிறகும் அன்னார் தொழ வைத்தார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் ஜனாயிஸ் பாபு மா பிகரிஹ மினஸ்ஸலாத்தி அலல் முனா.்.பிகீன்)

கஅப் பின் ஸுஹைர் மிகப் பிரபல்யமான கவிஞராவார். சில விஷயங்களின் காரணமாக அவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. மக்கா வெற்றிக்குப் பிறகு இப்போது நீங்கள் வந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மன்னிப்பை வேண்டுங்கள் என்று அவரது சகோதரர் அவருக்கு கடிதம் எழுதினார். எனவே, அவர் மதீனாவிற்கு வந்து தான் அறிந்த நபர் ஒருவரின் வீட்டில் தங்கினார். ஃபஜ்ர் தொழுகையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப்

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

பின்னால் நின்று தொழுதார். தொழுகைக்குப் பிறகு அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கஅப் பின் ஸுஹைர் மனந்திருந்தி வந்துள்ளார். மன்னிக்கும்படி வேண்டுகிறார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அவர் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவருடைய முகத்தைப் பார்த்திருக்கவில்லை. எனவே, அனுமதி வழங்கினால் அவரை உங்கள் முன் நிறுத்தலாமா என்று அவர் கேட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், சரி அவ்வாறே ஆகட்டும். நம் முன்னால் வரட்டும் என்று கூறினார்கள். அப்போது அந்த நபர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நானே கஅப் பின் ஸுஹைர் ஆவேன் என்று கூறினார். அப்போது அன்ஸாரி சஹாபி உடனே அவர் கொலை செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப் –பட்டிருந்ததால் அவரை கொலை செய்வதற்காக எழுந்தார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இவர் மன்னிப்பை வேண்டி வந்துள்ளார். அவரை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். அதன் பிறகு அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஓர் அரபிக் கவிதையைப் படித்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு தனது ஒரு போர்வையை அவருக்கு போர்த்தினார்கள். தாரீக் கமீஸ் தொகுதி 2 பாபு இஸ்லாம் கஅப் பின் ஸுஹைர் பக்கம் 121. பைரூத்தில் வெளியிடப்பட்டது)

இதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மன்னிக்கும் தரம் ஆகும். மன்னிக்க மட்டும் செய்யவில்லை. மாறாக, அன்பளிப்பு வழங்கி துஆ செய்து அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மன்னித்தலுக்கான எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. மனிதன் ஆச்சரியமடைந்து நிற்கும் அளவிற்கு அன்னாரின் மன்னிக்கும் தரம் உச்சத்தை அடைந்திருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறை நெருக்கத்தைப் பெற்ற மக்கள் பெரும் பெரும் ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளானார்கள். மிகவும் மோசமாக துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால், அவர்களுக்கு أَعْرِضْ عَنِ الْجَاهِلِيْنَ 'அறிவீனர்களிடமிருந்து விலகிக் கொள்வீராக' என்றே கூறப்பட்டது. நமது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையே எடுத்துக் கொள்ளுங்கள். அன்னாருக்கு மிக மோசமான துன்பங்கள் தரப்பட்டன. ஏசிப் பேசப்பட்டு ஏளனத்திற்குள்ளாக்கப்பட்டார்கள். ஆனால், நற்பண்புகளின் வடிவமான அந்த தூய நபி (ஸல்) அவர்கள் அதற்கு பகரமாக என்ன செய்தார்கள். அவர்களுக்காக துஆ செய்தார்கள். அறிவீனர்களிடமிருந்து நீர் விலகிக் கொண்டால் நாம் உமது கண்ணியத்தையும் உயிரையும் பாதுகாப்போம் என்று அல்லாஹ் அன்னாருக்கு வாக்களித்திருந்தான். தீயவர்கள் அன்னாரைத் தாக்க முடியாது என்றும் அல்லாஹ் கூறியிருந்தான். எனவே, அவ்வாறே நடந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகள் அன்னாரின் கண்ணியத்தின் மீது எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. எதிரிகளே இழிவடைந்து பெருமானார் (ஸல்) அவர்களது காலடிகளில் வந்து விழுந்தனர் அல்லது அவர்களுக்கு முன்னால் அழிந்து போயினர். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 103) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது சஹாபாக்களுக்கு மன்னித்தலின் எந்த உயர் தரமான நிலையை அடைய வேண்டும் என அறிவுரை கூறினார்களோ அது தொடர்பாக நமக்கு ஏராளமான அறிவிப்புகள் கிடைக்கின்றன. அதனை நான் எடுத்துரைக்கின்றேன்.

ஒருமுறை ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நின்றார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் ஒரு அடிமை உள்ளார். அவர் மிக அதிகமாக தவறிழைக்கிறார். அவருக்கு உடல் அளவிலான தண்டனை கொடுப்பதற்கு எனக்கு அனுமதி உள்ளதா? என்று கேட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரிடம், நீங்கள் அவரை தினமும் 70 முறை மன்னியுங்கள். அதாவது மிக அதிகமாக மன்னியுங்கள் என்று கூறினார்கள். (மஜ்மஅஸ் ஸவாயித் தொகுதி 4 பக்கம் 309 கிதாபுல் அதக் ஹதீஸ் எண்.7231 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் வெளியிடப்பட்டது)

எனவே, தனக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம் நடந்து கொள்வது தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிர்ணயித்த தரம் இதுவேயாகும். இங்கு இதனையும் தெளிவுபடுத்தி விடுகிறேன். அதாவது, இன்றைய காலத்தில் அடிமைத்தனம் இல்லை. ஒரு நம்பிக்கை கொண்ட பணியாளரும் தம்மீது சுமத்தப்பட்ட கடமைகளை சரிவர நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அவர் மீது உள்ளது. மன்னிக்கும்படி கட்டளை உள்ளது. எனவே, அனைத்துப் பணிகளையும் தவறாகவே செய்து கொண்டு செல்லலாம் என்பது இல்லை. உதாரணமாக, மற்ற இடங்களில் இந்த கட்டளையும் உள்ளது. அதாவது, எவரிடம் என்ன பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதனை அவர் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். எனவே, இரு தரப்பிற்கும் கட்டளை உள்ளது. எங்கு முதலாளி தனது பணியாளரின் சின்னச் சின்ன தவறுகளில் கோபப்படக் கூடாது. அவரை மன்னிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதோ அங்கு பணியாளர்களும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிக்குரிய முழுமையான உரிமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டளையும் தரப்பட்டுள்ளது.

மன்னித்தல் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அறிவுரை செய்தவாறு கூறுகின்றார்கள்: ஒரு ஜமாஅத்தை ஆயத்தப்படுத்துவதன் நோக்கம் என்னவென்றால் உங்களிடம் நாவு, காது, கண் மற்றும் ஒவ்வொரு உறுப்பினுள்ளும் இறையச்சம் ஊடுருவி விட வேண்டும். இறையச்சத்தின் ஒளி அதன் உட்புறமும், வெளிப்புறமும் இருக்க வேண்டும். அழகிய நற்பண்புகளின் உயர் தரமான முன்மாதிரி வெளிப்பட வேண்டும். தேவையற்ற கோபமும், ஆவேசமும் இருத்தல் கூடாது.

அவர்கள் கூறினார்கள்: நமது ஜமாஅத்தின் பெரும்பாலாரிடத்தில் கோபத்தின் குறைபாடு இன்று வரை உள்ளது. சிறிய சிறிய விஷயங்களில் கூட பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் உருவாகி விடுகிறது. தங்களுக்குள் சண்டையிட்டு மோதிக் கொள்கின்றனர். அதுபோன்ற மக்களுக்கு நமது ஜமாஅத்துடன் எந்தப் பங்கும் இல்லை. ஒருவர் ஏசிப் பேசினாலும் கூட மற்றவர் அமைதியாக இருந்து எந்தப் பதிலும் கொடுக்காமல் இருந்து விடுவதால் என்ன கஷ்டம் வந்து விடப் போகிறது? எல்லா ஜமாஅத்துகளின் சீர்திருத்தமும் துவக்கத்தில் ஒழுக்கத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. ஆரம்பத்திலிருந்தே பொறுமையுடன் தர்பிய்யத்தில் முன்னேற்றம் காண வேண்டும். மிகச் சிறந்த வழிமுறை என்னவென்றால் ஒருவர் தம்மை ஏசிப் பேசினாலும் அவருக்காக மன வேதனையுடன் துஆ செய்ய வேண்டும். முதலில் பொறுமையுடன் உங்களை ஒழுங்குபடுத்துங்கள். பின்னர் பிறரையும் சீர்படுத்துங்கள். அதற்கு சிறந்த வழி என்னவென்றால், அல்லாஹ் அவரை சீர்படுத்த வேண்டும் என துஆ செய்யுங்கள். மேலும் உள்ளத்தில் ஒருபோதும் பகைமையை வளர்க்கக் கூடாது.

மென்மை, பொறுமை, மன்னித்தல் போன்ற நற்பண்புகளுக்கு பகரமாக மனிதனிடம் காட்டுமிராண்டித்தனம் இடம் பெறுவதை அல்லாஹ் ஒருபோதும் விரும்புவதில்லை. நீங்கள் இந்த நற்பண்புகளில் முன்னேறினால் மிக விரைவில் இறைவனை அடைந்து விடுவீர்கள். எல்லா மனிதர்களின் குணமும் ஒன்றுபோல் இருப்பதில்லை என்பது உண்மையாகும். பலதரப்பட்ட குணநலன்கள் இருக்கும். எனவேதான் திருக்குர்ஆனில் كُلٌّ يَّعْمَلُ عَلٰى شَاكِلَتِهٖ என வந்துள்ளது. அதாவது ஒவ்வொருவரும் தத்தமது நிலையில் செயல்படுகின்றனர். ஆனால் சில மனிதர்கள் சில குணநலன்களில் சிறந்தவராக இருந்தால் வேறு சில குணங்களில் பலவீனமானவர்களாக உள்ளனர். ஒரு நற்குணத்தில் நல்லவராக இருந்தால் மற்றொரு நற்பண்பில் தீயவராக இருக்கின்றார். அதற்காக சீர்திருத்தம் சாத்தியமில்லை என்ற முடிவுக்கு நாம் வந்து விடக்கூடாது. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 127-128; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) பலதரப்பட்ட இயல்புகளை அல்லாஹ் படைத்துள்ளான். சிலர் சில நல்லொழுக்கங்களில் முன்னேறியுள்ளனர். ஆனால் வேறு சிலவற்றில் பின்தங்கியுள்ளனர். அதற்காக சீர்திருத்தம் சாத்தியமில்லை என்று கூறிவிட முடியாது. மனித இயல்புகள் பலதரப்பட்டதாகும். எவரிடம் பல நல்ல விஷயங்கள் உள்ளனவோ அவரிடம் பலவீனமும் இருக்கின்றது. ஒருவரிடம் பலவீனங்கள் மட்டுமே உள்ளது. அவரிடம் நல்ல விஷயங்களே இல்லை என்று கூறுவது தவறு. நல்ல விஷயங்களும் இருக்கும். பலவீனங்களும் இருக்கும். ஆனால், அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடந்து நாம் நம்மை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டுமென ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் உயர் தரம் என்னவோ அதனை நாம் அடைய வேண்டும் என அன்னார் விரும்புகின்றார்கள். பலவீனங்களை அகற்றுவதற்கு எப்போதும் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். மேலும், நாம் நமது சுற்றுப்புறத்தை அமைதி நிறைந்ததாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிர்ணயித்த விதிமுறையைப் பின்பற்ற வேண்டும். அது என்ன? உங்களுக்கு நீங்கள் விரும்புகின்றவற்றையே உங்களின் சகோதரருக்காகவும் விரும்ப வேண்டும் என்பதாகும்.

அல்லாஹ் நம் அனைவருக்காகவும் அந்த உயர் தரத்தை அடைவதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

## 122 –வது காதியான் ஆண்டு மாநாடு
## [ஆண்டு மாநாடு தொடங்கப்பட்டதிலிருந்து 125 –வது வருடம்]

*ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காதியான் ஆண்டு மாநாட்டை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28 (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்) தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக ஆயத்தமாகத் தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இறைவனுக்காக நடத்தப்படும் இம்மாநாட்டிலிருந்து அருள்களைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடப்பதற்கும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கும் அது காரணமாக இருப்பதற்கும் நீங்கள் தொடர்ந்து துஆ செய்யுங்கள்.*

*(தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது)*

# கலீ:.பத்துல் மஸீஹிடம் ஒரு சிறப்பான விஷயம் இருக்கின்றது. அது எனக்கு வேறு எங்கும் தென்படவில்லை

## Plungstadt நகரில் அஹ்மதிய்யா பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில் ஹுஸூர் அவர்களின் எழுச்சிமிக்க உரையைக் கேட்டு கண்ணியத்திற்குரிய விருந்தினர்களிடம் ஏற்பட்ட தாக்கங்கள்

2016 ஆம் ஆண்டு ஆகஸ்டு 28 -ஆம் தேதி ஜெர்மனியிலுள்ள Plungstadt நகரில் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல விருந்தினர்களும் தங்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களை வெளிப்படுத்தியிருந்தனர். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு விருந்தினர்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. விருந்தினர்களால் இதனை வெளிப்படுத்திக் கூறாமல் இருக்க முடியவில்லை.

Plungstadt நகரத்தின் முன்னாள் மேயர் Hosrt Baler அவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்களை சந்தித்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. கலீ:.பத்துல் மஸீஹ் என்ன விஷயங்களைக் கூறிக் கொண்டிருந்தார்களோ அந்தக் குரல் அவர்களது உள்ளத்திலிருந்து வெளிப்பட்டு எனது உள்ளத்தை அடைந்தது. வெளிப்படையாக ஏதையாவது கூற வேண்டும் என்பதற்காக அவர்கள் பேசவில்லை. மாறாக, அவர்கள் கூறிய ஒவ்வொரு விஷயமும் உண்மையாக இருந்தது. இன்றைய நிகழ்ச்சிகளின் தரம் மிகவும் உயர்வானதாக இருந்தது.

Plungstadt நகரத்தின் தற்போதைய மேயரான Patrick Koch தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்திக் கூறினார்:

எனக்கு கலீ:.பத்துல் மஸீஹ் அவர்களுடன் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. கலீ:.பா ஸாஹிப் அவர்கள் மிகவும் அன்பு செலுத்தக் கூடியவராகவும் அமைதியை விரும்பக்கூடிய மனிதராகவும் இருக்கின்றார். கலீ:.பத்துல் மஸீஹ் அவர்களின் அந்தஸ்து எந்த அளவு உயர்வானதாக இருக்கின்றது என்றால் அவர்கள் எங்களது சிறிய நகரத்திற்கு வந்தார்கள். அவர்களை சந்திப்பது, அவர்களுடன் அமர்ந்து உணவு உண்பது ஆகியவை எனக்கு மிகப்பெரும் கண்ணியத்தையும் பெருமையையும் தரும் விஷயமாகும். கலீ:.பத்துல் மஸீஹிடம் பேசியதன் மூலமாக எனது அறிவு மிகவும் அதிகரித்துள்ளது. நான் அவர்களிடம் கலீ:.பா எவ்வாறு உருவாகின்றார்? என்ற கேள்வியையும் கேட்டேன். அவர்கள் மிகுந்த பரிவுடன் எனது கேள்விகளுக்கான பதில்களைக் கூறினார்கள்.

✰ ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்கள் போற்றுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள். தாம் கூறுவதை பிறரை ஏற்க வைப்பார்கள். அவர்களிடம் வெளிவேஷம் இல்லை. மாறாக, உண்மையான ஈமானை அவரிடம் பார்க்க முடிகின்றது. வீடுகளில் சடங்காக சில விஷயங்கள் செய்யப்படுகின்றதே தவிர மக்கள் அவற்றில் நம்பிக்கை வைக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், ஹுஸூர் அவர்களிடம் நான் இந்த விஷயத்தைப் பார்த்தேன். இதனை நான் உணரவும் செய்தேன். அதாவது, அவர்கள் தமது கொள்கையில் முழுமையான உறுதியுடன் நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

✰ Gasse என்ற வயதான ஒரு பெண் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்:

இஸ்லாம் சகோதரத்துவத்தையும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்புடனும் நேசத்துடனும் இருக்க வேண்டும் என்பதையும் போதிக்கின்றது. நான் இந்த நகரத்தின் நிர்வாகத்தில் பல வருடங்கள் பணி புரிந்துள்ளேன். மக்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் சகோதரத்துவம் மற்றும் அன்பின் உணர்வுடன் சந்திக்க வேண்டும் என்பதற்காக நான் முயற்சி செய்து 25 வருடங்கள் ஆகி விட்டன. இந்த நிகழ்ச்சியின் மூலமாக இத்தகைய ஒரு நிலையை நமக்கு இஸ்லாம் காட்டியுள்ளது. அதைப்போன்ற ஒரு வெற்றியை என்னால் பெற முடியவில்லை. காலத்தின் கலீ:.பாவின் பணிவும் மென்மையான உள்ளமும் தெளிவாகத் தெரிந்தது. குறிப்பாக மனித இனத்திற்கு அவர்கள் செய்கின்ற தொண்டும் அதன் மீது அவர்கள் வைத்துள்ள நேசமும் மிகவும் வெளிப்படையாகத் தெரிகின்றது. நமது எதிர்காலம் அமைதி நிறைந்ததாக இருக்கும் என்று இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நான் நம்புகின்றேன். அன்பும் சகோதரத்துவமும் இருக்கும். அதற்காகவே நாம் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

✰ City Council -ன் உறுப்பினரான Brigite Edelhmann Scheibe அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

காலத்தின் கலீ:.பா அவர்கள் அமைதியின் தூதுச் செய்தியை வழங்கினார்கள். அமைதியையே பரப்பினார்கள். கலீ:.பத்துல் மஸீஹ் அவர்கள் எந்தவொரு மார்க்கமும், இஸ்லாமும் கொலை செய்யும்படி, அநீதியிழைக்கும்படி போதிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். இஸ்லாத்தின் இந்த அமைதி மற்றும் அன்பின் போதனை மிகவும் நன்றாக இருக்கின்றது. எல்லாரும் ஒன்றாக இணைந்து அமைதியுடனும் அன்புடனும் இருக்க வேண்டும் என்ற கலீ:.பத்துல் மஸீஹ் அவர்களின் போதனை என் மீது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

✰ ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவு திருக்குர்ஆனின் புனிதத் தன்மையைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும் தீவிரவாதத்தை மறுக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. எனக்கு எந்தவொரு பெரிய இஸ்லாமிய பிரமுகரையும் தெரியாது. ஆனால், கலீ:.பத்துல் மஸீஹ் அவர்கள் இஸ்லாத்தின் ஒரு பிரதிநிதியாக இருப்பதை நான் பார்க்கின்றேன்.

✰ ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்கள் இஸ்லாத்தின் அமைதியான போதனைகளை எடுத்துக் கூறி, மனித இனத்திற்குரிய உரிமைகளை எடுத்துக் கூறி நமக்கு கவனமூட்டி தமது பொறுப்பை நிறைவேற்றியுள்ளார்கள். ஹுஸூர் அவர்களிடமிருந்து ஓர் ஒளி வெளியேறியதைப் போன்று நான் உணர்ந்தேன்.

✰ ஒரு கிறித்தவ விருந்தினர் இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்கள் தைரியம் நிறைந்த மனிதராவார். அமைதி நிறைந்த தொலைநோக்குப் பார்வையுடைய இத்தகைய மனிதர்கள்தான் உலகிற்கு வழிகாட்ட வேண்டும். நான் போப் அவர்களை மிகவும் மதிப்பவனாவேன். ஆனால், கலீ:.பத்துல் மஸீஹிடம் ஒரு சிறப்பான விஷயம் இருக்கின்றது. அது எனக்கு வேறு எங்கும் தென்படவில்லை.

✰ 300 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து Stuttgart என்ற நகரத்திலிருந்து ஓர் இளைஞர் வந்திருந்தார். அவர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்கள் வயதானவராகவும் சோர்வாக இருந்தும் கூட மிகவும் அன்பாகவும் அழகிய முறையிலும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தனக்கு முன்னர் பேசிய சொற்பொழிவாளர்கள் தொடர்பாக அவர்கள் கூறினார்கள். முதலில் பேசிய ஒரு சொற்பொழிவாளர் கூறிய கருத்தை திருத்திக் கூறியவாறு பெரிய பள்ளிவாயில் குழப்பத்தின் அடையாளமல்ல. மாறாக, எந்த அளவு பள்ளிவாயில் பெரிதாக இருக்குமோ அந்த அளவு சமுதாயத்தில் அது மேலும் அன்பு மற்றும் அமைதி நிலவுவதற்கு ஒரு வழியாக இருக்கும் என்ற கலீ:.பத்துல் மஸீஹ் அவர்களின் இந்தக் கருத்து எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

✰ ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்கள் அனுதாபம் உள்ளவராகவும் திறந்த உள்ளம் கொண்டவராகவும் இருப்பது தெரிகின்றது. அவர்களிடம் அன்பு மற்றும் தொலைநோக்குப் பார்வை இருப்பதை மிகுதியாக உணர முடிகின்றது. இந்த விஷயங்கள்தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிப்படையாக இருக்கின்றன என்று நான் கருதுகின்றேன்.

✰ ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்:

கலீ:.பத்துல் மஸீஹ் அவர்களுக்கு ஜமாஅத்தில் ஒரு மிகப்பெரும் அந்தஸ்து இருந்தும் கூட அவர்கள் அடிக்கல் நாட்டும்போது நான் அவர்களிடமிருந்த பணிவையும், தாழ்மைக் குணத்தையும், மக்கள் மீது அவர்களுக்கு இருந்த அன்பையும், நெருக்கத்தையும் பார்த்தேன்.

✰ ஒரு கிறித்தவ பெண் இவ்வாறு கூறினார்:

இந்தப் பள்ளிவாயிலால் உங்களுக்கு மட்டும் பயன் இருக்காது. மாறாக, இது பரஸ்பரம் நம்மில் ஒருவர் மற்றவருக்கு அருகில் செல்வதற்கான வழியாக இருக்கும். இவ்வாறு நாம் அனைவரும் ஒன்றாக ஆகி விடுவோம்.

❖ ❖ ❖ ❖ ❖

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 27 OCTOBER 2016 Issue No. 34

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# ஜெர்மனியிலுள்ள PLUNGSTADT நகரத்தில் அஹ்மதிய்யா பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில் ஹுஸூர் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

பள்ளிவாயில் நகரத்தை விட்டும் தொலைவில் இருப்பது ஒரு பெரிய விஷயமல்ல. எனக்கு நினைவில் இருக்கின்றது. நமது வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. இலண்டனிலுள்ள ஃபஸ்ல் பள்ளிவாயிலுக்கான இடம் நமக்கு கிடைத்தபோது அது இலண்டனிலிருந்து மிகவும் தொலைவில் உள்ள இடமாக இருந்தது. அந்த இடம் காடாக இருந்தது. அப்போது அங்கிருந்த எங்களது முபல்லிக் அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதியிருந்தார். அதாவது, இந்த பள்ளிவாயிலுக்கான இடத்தை நமக்கு அரசாங்கம் தந்துள்ளது. ஆனால், அது நகரத்திற்கு மிகவும் தொலைவில் இருக்கின்றது. தூரம் மிக அதிகமாக இருக்கின்றது. யார் வருவார்கள்? என்று அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், நீங்கள் கவலைப்பட வேண்டாம். நரகம் இங்கேயே வந்து விடும் என்று அவருக்கு பதில் எழுதியிருந்தார்கள். இன்று நாம் பார்க்கின்றோம். இலண்டனில் ஃபஸ்ல் பள்ளிவாயில் எந்த இடத்தில் இருக்கின்றதோ அந்த இடம் எல்லா வகையிலும் ஏறக்குறைய நகரத்தின் மையப் பகுதியாக ஆகி விட்டது. எனவே, இந்தப் பள்ளிவாயிலும் நகரத்தின் மையப் பகுதியாக ஆகி விடும் என்று நான் நம்புகின்றேன் - இன்ஷா அல்லாஹ்.

இன்னொரு விஷயத்தையும் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டவர்கள் தொடர்பாக அவர்களிடமிருந்து குழப்பங்கள்தான் உருவாகின்றது என்று இன்றைய நாட்களில் ஒரு கருத்து இருந்து வருகிறது என்று அவர்கள் கூறினார்கள். இது முற்றிலும் சரியான விஷயம்தான். புதிதாக வந்திருக்கும் சிலர், சில சுயநலக்காரர்கள் அல்லாஹ்வுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளனர். நான் ஏற்கனவே கூறியது போன்றே அல்லாஹ் தனிப்பட்ட முறையில் எவருக்கும் உரியவன் அல்ல. அல்லாஹ் என்ற பெயரின் மீது எவரும் பிரத்யேக உரிமை கொண்டாட முடியாது. பல்வேறு மொழிகளில் பல்வேறு பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன. அல்லாஹ், இறைவன், God, பகவான் என்று பல பெயர்களை மக்கள் வைத்துள்ளனர். திருக்குர்ஆனின் முதல் அதிகாரத்திலேயே அல்லாஹ்வைப் பற்றி ரப்புல் ஆலமீன் (அனைத்து உலகங்களின் இறைவன்) என்று கூறப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் எல்லா உலகங்களையும் பரிபாலிக்கின்ற இறைவன் ஆவான். அவன் யூதர்களின் இறைவன் ஆவான்; அல்லாஹ் ஆவான். அவன் கிறிஸ்தவர்களின் இறைவன் ஆவான்; அல்லாஹ் ஆவான். அவன் இந்துக்களுக்கும் இறைவன் ஆவான்; அல்லாஹ் ஆவான். எனவே, இந்த அடிப்படையில் இங்கிருந்து அல்லாஹு அக்பர் என்ற முழக்கம் எழுகின்ற போது அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாஹு அக்பர் என்று முழக்கமிடும்போது ஒரு புரட்சியைக் கொண்டு வருவதற்காக அல்லது மற்ற மதத்தைச் சார்ந்தவர்களைக் கொலை செய்வதற்காக இந்த முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன என்று நீங்கள் புரிந்து கொள்ளாதீர்கள். இந்த அல்லாஹ் என்ற முழக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தரப்பிலிருந்து எழுப்பப்படும் போது அதற்கு பொருள் எங்கு நீங்கள் அல்லாஹ்வுக்குரிய உரிமைகளைச் செலுத்துகின்றீர்களோ அங்கு அடியார்களுக்குரிய உரிமையையும் செலுத்துவதற்கு உங்களை நீங்களே முன்பை விட அதிகமாக அர்ப்பணிக்க வேண்டும் என்பதேயாகும். இதுவே எங்களது போதனைகளின் சுருக்கமாகும். இதுவே இஸ்லாத்தின் போதனையுமாகும்.

இந்த பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகும் கூட இங்கு வாழ்கின்ற அஹ்மதிகள் தங்களது உரிமையைச் செலுத்துபவர்களாக இருப்பதற்கு அல்லாஹ் உதவுவானாக! மேலும், இந்தப் பள்ளிவாயிலின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக அவர்களை ஆக்குவானாக! எந்த அன்பையும் நேசத்தையும் அஹ்மதிகள் முதலிலேயே வெளிப்படுத்திக் காட்டினார்களோ அவற்றை அவர்களுக்கு பள்ளிவாயில் தரப்பட்ட பிறகு மேலும் அவர்கள் அதிகமாக வெளிப்படுத்திக் காட்டுவர் என்பது மக்களுக்கு இங்கு தென்பட வேண்டும். இதற்குப் பிறகு நான் எனது உரையை நிறைவு செய்கின்றேன். இப்போது அடிக்கல் நாட்டப்படும். அங்கேயே துஆ செய்யப்படும். அஸ்ஸலாமு அலைக்கும்.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

தப்லீக் பணிகள் நடந்துள்ளன. அதாவது, நான் பஞ்சாப், அமிர்தசரஸ், லாஹூர், ஜலந்தர், சியால்கோட், தில்லி, லூதியானா போன்ற இந்தியாவிலுள்ள சில நகரங்களில் நடைபெற்ற பெரும் பெரும் கூடங்களில் நானே சென்று இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைத்துள்ளேன். மேலும், ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு முன்னால் இஸ்லாத்தின் போதனைகளின் சிறப்புகளை எடுத்துக் கூறியுள்ளேன். இஸ்லாத்தின் உண்மை தொடர்பாக ஏறக்குறைய எழுபது நூல்களை அரபியிலும், ஃபார்ஸியிலும், உர்துவிலும், ஆங்கிலத்திலும் எழுதியுள்ளேன். இவற்றின் தொகுதிகள் ஏறக்குறைய ஓர் இலட்சம் இருக்கும். இந்த நூல்களை எழுதி இஸ்லாமிய நாடுகளில் அவற்றை வெளியிட்டுள்ளேன். இந்த நோக்கத்திற்காக பல இலட்சக்கணக்கான பிரசுரங்களை வெளியிட்டுள்ளேன். இறைவனின் அருளாலும் அவன் நேர்வழி காட்டியதன் மூலமாகவும் இன்று வரை மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் எனது கைகளில் தமது பாவங்களிலிருந்து தவ்பா செய்து விட்டனர்.

எந்த அளவு விரைவாக இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றால், ஒவ்வொரு மாதத்திலும் நூற்றுக்கணக்கான மக்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விடுகின்றனர். நமது இயக்கம் தொடர்பாக வெளிநாட்டிலுள்ள மக்கள் தெரியாமல் இல்லை. இன்னும் சொல்வதென்றால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் தொலைதூரத்திலுள்ள நாடுகள் வரை நமது அழைப்பு எட்டி விட்டது. எதுவரையென்றால், அமெரிக்காவிலுள்ள பல மக்கள் நமது ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். மேலும், சுயமே அவர்கள் அசாதாரணமான பூகம்பங்கள் பற்றிய எனது முன்னறிவிப்புகளை, நமது அடையாளங்களை நிரூபிப்பதற்காக அமெரிக்காவிலுள்ள புகழ்பெற்ற பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளனர். ஐரோப்பாவிலுள்ள சில மக்களும் கூட நமது ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். இஸ்லாமிய நகரங்களைப் பற்றி நான் என்ன கூறுவது ? இப்போது நான் கூறியது போன்றே மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான அடையாளங்கள் பற்றி மக்கள் அறிந்திருக்கின்றனர். பெரும்பாலார் அவர்களில் நல்லவர்களாகவும் நற்பாக்கியம் பெற்றவர்களாகவும் இருக்கின்றனர்.

☆ இன்றிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னர் பராஹீனே அஹ்மதிய்யாவில் என்னைப் பற்றிய இறைவனின் இந்த இல்ஹாம் இடம்பெற்றிருக்கின்றது. நான் மறைவாக எனது வாழ்க்கையைக் கழித்து வந்த அந்தக் காலத்தில் வந்த இல்ஹாமாக இது இருக்கின்றது. எனது தந்தையார் மற்றும் என்னைப் பற்றிய அறிமுகம் இருந்த ஒரு சிலரைத் தவிர எவருக்கும் என்னைப் பற்றி அப்போது தெரியாது. அப்போது எனக்கு வந்த இல்ஹாம் இதுவாகும்:

أَنْتَ مِنِّيْ بِمَنْزِلَةِ تَوْحِيْدِيْ وَتَفْرِيْدِيْ فَحَانَ أَنْ تُعَانَ فَتُعْرَفَ بَيْنَ النَّاسِ

அதாவது, நீ எனது ஏகத்துவம் மற்றும் எனது தனித்தன்மையின் நிலையில் இருக்கின்றாய். அந்த நேரம் வந்து விட்டது. உனக்கு எல்லா வகையான உதவியும் வழங்கப்படும். உலகில் நீ கண்ணியத்துடன் புகழ் பெறுவாய். புகழ் பெறுவதற்கான வாக்குறுதியை தனது ஏகத்துவத்துடனும் தனது தனித்தன்மையுடனும் இணைத்து இறைவன் கூறியிருப்பது இந்தக் கருத்தின் பக்கம் சுட்டிக் காட்டக் கூடியதாக இருக்கின்றது. அதாவது கம்பீரத்துடனும் கண்ணியத்துடனும் புகழ்பெற்று விளங்குவதற்கான உண்மையான உரிமை ஏகனான இணைகளற்றவனான அந்த இறைவனுக்கே இருக்கின்றது. பிறகு, எவர் மீது இறைவனது குறிப்பான அருள் இருக்குமோ அவர் இறைவனுடன் முழுமையாக ஒன்றி விடுவதன் காரணமாக அவர் இறைவனின் ஏகத்துவத்தின் இடத்தில் இருக்கின்றார். இருமை அவரிடமிருந்து அகன்று விடுகின்றது. பிறகு, மேலான இறைவன் எவ்வாறு கண்ணியம் கம்பீரம் மற்றும் மகத்துவம் ஆகியவற்றுடன் அவரை புகழ்பெற வைக்கின்றான் என்றால், அது சுயமே அவன் தன்னை பிரபல்யப்படுத்திக் கொண்டது போன்றே இருக்கின்றது. ஏனென்றால், அவர் அதே போன்ற கண்ணியத்தைப் பெற வேண்டும் என்ற இந்த உரிமையை அந்த இறைவனது ஏகத்துவமும் அவனது தனித்தன்மையும் உருவாக்கி இருக்கின்றது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 169-172)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad